# முன்னேற்ற அறிக்கை

## நீதி அமைச்சு

**2013 சனவரி - டிசம்பர்**

**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி**
**கொழும்பு 12**
**இணையத்தளம்: www.justiceministry.gov.lk**

# கௌரவ ரவூப் ஹக்கீம்

## நீதி அமைச்சர்

# திருமதி. கமலினீ த சில்வா

## செயலாளர்- நீதி அமைச்சு

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| 1. நோக்கு மற்றும் செயற்பணிகள் | 03 |
| 2. நீதி அமைச்சின் பணிகள் | 04 |
| 3. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் பணிகள் | 05 |
| 4. அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 07 |
| 5. நீதி அமைச்சின் செயலாற்றுகை | 08 |
| 5.1. சட்டப்பிரிவு | 08 |
| 5.2 நிருவாக மற்றும் தாபனப் பிரிவு | 14 |
| 5.3. உட்கட்டமைப்புப் பிரிவு | 18 |
| 5.4. கணக்குகள் பிரிவு | 22 |
| 5.5. திட்டமிடற் பிரிவு | 23 |
| 5.6. நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 24 |
| 5.7. உள்ளக கணக்காய்வு பிரிவு | 25 |
| 6. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை | 26 |
| 6.1 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 26 |
| 6.2 சட்ட ஆணைக்குழு திணைக்களம் | 28 |
| 6.3 கடன் இணக்க சபை திணைக்களம் | 29 |
| 6.4 இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு | 31 |
| 6.5 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 34 |
| 7. நீதிமன்றங்கள் | 38 |
| 7.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 38 |
| 7.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 40 |
| 7.3 தொழில் நியாயசபைகள் அலுவலகம் | 41 |
| 7.4 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும் | 43 |
| 8 தொடர்புடைய நிறுவனங்கள் | 45 |
| 8.1 இலங்கை சட்டக்கல்லூரி | 45 |

# நீதி அமைச்சு

## நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.

## செயற்பணிகள்

- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.

## 02. நீதி அமைச்சின் பணிகள்

- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும்பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான நீதிமன்ற நிருவாக அலுவல்கள்.
- நீதிமன்றங்களின் நிருவாகம்
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- தொழில் நியாயசபைகள் தொடர்பான அலுவல்கள்.
- சட்ட மீள்கூற்றும் கோவைப்படுத்தலும்.
- சட்ட மறுசீரமைப்பு.
- சட்டச் சொற்றொகுதிகளின் தயாரிப்பும் வெளியீடும்.
- காதி நீதிமன்ற முறைமையின் விளைவுப் பெருக்கத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டு நீதிமன்ற முறையின் உசாவுகையுடன் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்தலும்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்
- அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களைக் கண்காணித்தலும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பணிகளும்

## 03. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் பணிகள்

**அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்**

*அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தின் ஆதரவைப்பெற்ற நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் விஞ்ஞான ஆய்வுகூட மதியுரைச்சேவையை வழங்குதல்.*

***சட்ட ஆணைக்குழு திணைக்களம்***

*சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் சட்டங்களைக் கோவைப்படுத்தல், காலங் கடந்த மற்றும் அனாவசிய சட்டங்களை நீக்கிவிடுதல், சட்டங்களை இலகுபடுத்தலும் சிறியளவிலான மாற்றம் செய்தலும், சட்டமூல வரைவு, துணைச்சட்டங்களை மீளாய்வு செய்தல் வழக்காடல் பற்றி நிருவாக நடவடிக்கை முறையை யதார்த்தப்படுத்தல் மற்றும் சட்ட ஆராய்ச்சிகளை நடாத்துதல்*

**நீதி அமைச்சு**

,

**கடன் இணக்கசபைத் திணைக்களம்**

ஈட்டு முறிகள் மற்றும் பிற அசைவற்ற ஆதனங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய கடன் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

**உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகம்**

உயர் நீதிமன்றத்தின் அறிக்கைகளைப் பேணுதல், மேன்முறையீடுகள் மற்றும் விண்ணப்பங்களை பட்டியல்படுத்தல், உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளை ஆட்சேர்ப்புச்செய்தல்

## மஹிந்த சிந்தனை தொலை நோக்கிற்கிணங்க:

- குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் நன்மைக்காக இலவச சட்ட உதவி ஏற்பாடுகளையும் நாடு முழுவதிலும் சட்ட உதவி நிலையங்களையும் அமைத்தல்
- இதுவரை கொழும்பில் மையப்படுத்தப்பட்டிருந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதித்துறை செயற்பாடுகளை மாகாண மட்டத்திற்குப் பன்முகப்படுத்துதல்.
- மத்தியஸ்த செயற்பாடுகளை பலப்படுத்துவதன் மூலம் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்றுப் பொறிமுறையை வழங்குதல்
- மேலும் வினைத்திறனான நீதி நிர்வாக முறையோன்றாக புதிய சட்டங்களை அறிமுகம் செய்தல்
- வடக்கில் நீதிமன்றங்களை மீள அமைத்தல்
- முஸ்லிம் திடீர் மரண விசாரணையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கும், தேவைக்கேற்ப புதிய இடங்களில் பதவிகளை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகள்
- தொழில் நியாய சபைகளை விஸ்தரிப்பதன் ஊடாக கைத்தொழில் பிணக்குகளை தீர்த்துவைக்கும் பொறிமுறையை வலுப்படுத்துதல்.
- அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் வழக்குகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்துடன் அலுவலக வசதியை உள்ளடக்கிய ஆய்வுகூடத்தினை வழங்குதல்.
- வழக்குகளின் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிறுவர்களுக்கான தனியான நீதிமன்ற முறையை அமைக்க நடவடிக்கை எடுத்தல்
- கடன் இணக்கசபை திணைக்களத்தின் பணிகளை பன்முகப்படுத்துதல்.

## 04. அமைச்சினது பிரிவுகளின் பணிகள்

- அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:
  i. சட்டப்பிரிவு
  ii. நிருவாக / தாபனப்பிரிவு
  iii. உட்கட்டமைப்புப்பிரிவு
  iv. கணக்குகள் பிரிவு
  v. திட்டமிடற்பிரிவு
  *vi.* உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

1. **சட்டப்பிரிவு**

நீதி நிர்வாகத்திற்கு ஏற்புடைய சட்டங்களுக்கான கொள்கைகளை தயார் செய்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடல் மற்றும் சட்ட உதவிகளை வழங்கல். குற்றவியல், குடியியல், மற்றும் வர்த்தக விடயங்கள் மற்றும் சர்வதேச ரீதியில் பிள்ளைகளைக் கடத்தலில் குடியியல் சம்பந்தமான விடயங்கள் போன்றவற்றில் பரஸ்பர உதவிக்கான மத்திய அதிகாரியாக இருத்தல். 1995ம் ஆண்டு 5ம் இலக்க சட்டத்தின் கீழ் மறியற்காரர்களை ஒப்படைத்தல் மற்றும் மன்னிப்பு வழங்கப் பரிந்துரைத்தல்.

2. **நிருவாக / தாபனப்பிரிவு**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஏனைய அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

3. **உட்கட்டமைப்புப்பிரிவு**

(அ) நீதிமன்றங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள், தொழில் நியாய சபைகள், மற்றும் அமைச்சின் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல்.

(ஆ) நீதிமன்றங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள், தொழில் நியாய சபைகள், மற்றும் அமைச்சின் ஏனைய கட்டிடங்களுக்கு பகுதிகளை சேர்த்தலும் மேம்படுத்தலும்.

4. **கணக்குகள் பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்.

5. **திட்டமிடற்பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் கருத்திட்டங்களை திட்டமிடலும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் சீரமைத்தலும்.

6. **உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 05. நீதி அமைச்சின் செயலாற்றுகை

## 5.1 சட்டப்பிரிவு

2013 டிசம்பர் 31ம் திகதி வரை சட்டப்பிரிவினால் பின்வரும் சட்டமூலங்களும் சட்டத் திருத்தங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1. சிறுவர் (நீதிமுறை பாதுகாப்பு) சட்டமூலம்

இச் சட்டமூலத்தின் மூலம் பிள்ளை பாதுகாப்பு தொடர்பில் தற்காலத்திற்கு ஏற்றவாறு ஏற்பாடுகளைச் செய்வதுடன் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தை நீக்கிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் நீதிமன்றம், நன்நடத்தை பாதுகாவல் மற்றும் பொலிசுக்கும் இடையே ஒத்துழைப்பை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பிள்ளையின் உயரிய நலன்புரியை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்டமூலமானது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு என்பவற்றுடன் கூட்டாக இணைந்து அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### 2. காலவிதிப்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்

இச் சட்டமூலத்தால் காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளால் அநீதிக்கு உட்பட்ட ஆட்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளை உள்ளடக்கி இச் சட்டமூலமானது சட்டவரைநர் திணைக்களத்தினால் வரையப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### 3. காலவிதிப்பு கட்டளைச் சட்டத் திருத்தம் (பகுதி 15)

சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழு தனது பரிந்துரைகளைச் செய்துள்ளது. அப் பரிந்துரைகளை உள்ளடக்கி இச் சட்டமூலமானது சட்டவரைநர் திணைக்களத்தினால் வரையப்பட்டுள்ளது..

### 4. ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலம்

கணினிக் குற்ற சட்டமூலத்தில் கணினி மூலம் புரியப்படுகின்ற பிள்ளைகள் தொடர்பான ஆபாசமான காட்சிகள் சம்பந்தப்பட்ட பகுதியை நீக்கி இதனை புதிய ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்பில் உள்ளது.

### 5. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்

இச்சட்ட மூலம் 2013-01-22 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (2013ம் ஆண்டின் 2ம் இலக்க சட்டம்)

### 6. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் திருத்தம்

தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும்பொருட்டு இச்சட்டமூலம் வரையப்படுள்ளது.

## 7. இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம்

தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும்பொருட்டு இச்சட்டமூலம் வரையப்படுள்ளது.

## 8. கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம்

தொழில் நியாய சபைகளின் தவிசாளர்களால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற தீர்ப்புக்களை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இச்சட்ட மூலத்தால் செய்யப்பட்டுள்ளன. எனினும் சில தொழிற்சங்கங்கள் தொழிலமைச்சுக்கு தமது ஆட்சேபணைகளைத் தெரிவித்துள்ளன.

## 9. குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தும் சட்டமூலம்

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்கள் ஆகிய இரு சாராருக்கும் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இச் சட்டமூலம் செய்கிறது. இச் சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவிற்கு ஆற்றுப்படுத்தியுள்ளது. இவ் உபகுழு சில பரிந்துரைகளைச் செய்தது. சட்டவரைநர் திணைக்களத்தினால் அப் பரிந்துரைகள் இச் சட்ட மூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அமைச்சரவை இச் சட்டமூலத்தை நிதித்திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பிற்கு ஆற்றுப்படுத்தியுள்ளது.

## 10. நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலம்

மோசடியான காணி கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றதனால் நொத்தாரிசு கட்டளைச்சட்டம் திருத்தஞ் செய்யப்படவுள்ளது. உறுதியில் கையொப்பமிடும்போது உயிரியல் கையொப்பங்களை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூலமானது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவிற்கு ஆற்றுப்படுத்தியது. இவ் உபகுழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. அப் பரிந்துரைகள் இச் சட்ட மூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## 11. முஸ்லிம் விவாக, மணநீக்கச் (திருத்தம்) சட்டமூலம்

கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் முஸ்லிம் விவாக, மணநீக்க (திருத்தம்) சட்டம் பற்றி கலந்தாலோசனை செய்து தொடர்ந்தும் வரைவு தயார் செய்யப்பட்டுக் கொண் டிருக்கிறது.

## 12. தண்டனைச் சட்டக்கோவைச் (திருத்தம்) சட்டமூலம்

பரஸ்பர ஒற்றுமையுடன் நடைபெற்ற போதிலும் நியதிச்சட்டமுறையான கற்பழிப்பின் கீழான பாலியல் உறவுகளை வைத்துக்கொண்ட பெண் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்ட மூலம் தற்போது பரிசீலிக்கப்படுகிறது.

### 13. சிறைச்சாலைகள் நிருவாக சட்டமூலம்

இச் சட்டமூலம் சிறைச்சாலை நிருவாகம் தொடர்பில் புதிய நிருவாக முறையொன்றை வழங்குகிறது. இச் சட்டமூலம் சிறைச்சாலைகள் மற்றும் பனர்வாழ்வு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 14. குடியியல் வழக்கு நடவடிக்கைகளின் போது பெற்றோர் தன்மையைப் பரீட்சித்துப் பார்க்கும் சட்டமூலம்

இச் சட்டமூலத்தால் தாய்மை அல்லது தந்தையை இனங்காண்பதற்கு டீ.என்.ஏ. பரிசோதனைக்காக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இச்சட்டமூலம் பிள்ளைகளின் பொறுப்பு, பராமரிப்பு, மற்றும் மரபுரிமை போன்ற விடயங்கள் தொடர்பில் மிகவும் உதவிகளை வழங்குகிறது. இச் சட்டமூலமானது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 15. நீதித்துறைச் (திருத்தம்) சட்டம் (மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்புச் செய்தல்)

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 92 ஆக உயர்த்துமாறு கிடைக்கப்பெற்ற கோரிக்கையைத் தொடர்ந்து மேலே கூறப்பட்ட சட்டமூலத்தூடன் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று இணைக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 16. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் (சட்டமுறை மத்தியஸ்தம்) மற்றும் முன் விசாரணை (நடவடிக்கைகள்) சட்டமூலம்

சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவினால் இச் சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

### 17. வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை அமுல்படுத்தல்

சட்ட ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட இச்சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

### 18. வாக்காளர்களை பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

இச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. (2013ம் ஆண்டின் 37ம் இலக்கச் சட்டம்)

### 19. நீதிமன்ற அவமதிப்பு சட்டமூலம்

இச்சட்மூலம் பரிசீலிக்கப்படுகிறது.

## ஏனைய பணிகள்

- **2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்'வதேச பிள்ளை துஷ்பிரயோகச் சட்டம்**

2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பிள்ளை துஷ்பிரயோகம் தொடர்பாக 38 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் பெருமளவிலான விண்ணப்பங்கள் வழக்குத்தொடுப்புதலின்றி முடித்துக் கொள்ளலாம். தற்போது இச் சட்டத்தின்கீழ் மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு மாத்திரமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரு பிள்ளைகள் அவுஸ்திரேலியாவுக்கும் இத்தாலிக்கும்கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்படுவார்கள். நோர்வேயிலிருந்து கொண்டுவரப்பட்ட இரு பிள்ளைகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் நோர்வேக்கு அனுப்பப்பட்டனர். ஐக்கிய இராட்சியம் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட இரு விண்ணப்பங்கள் சம்ந்நமாக அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்கிறது.

- **தவறாளர்களை ஒப்படைத்தல்**

இலங்கையினுள் தவறொன்றைப் புரிந்து தவறாளராகிய வேறொரு நாட்டின் பிரசையொருவரை அந்நாட்டிற்கு ஒப்படைத்தல் மற்றும் வேறொரு நாட்டில் தவறாளராகிய இலங்கைப் பிரசை ஒருவரை இலங்கைக்கு ஒப்டைத்தல் தொடர்பான 1995ம் ஆண்டின் 5ம் இலக்கச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. அதன்படி 23 இந்திய தவறாளர்கள், 50 பாகிஸ்தான் தவறாளர்கள் மற்றும் மலைதீவு தவறாளர் ஒருவரும் அந் நாடுகளுக்கு ஒப்டைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய இராச்சியத்தில் தவறாளர்களாகிய இலங்கையர் இருவர் அவர்களது சிறைத்தண்டனயை செயற்படுத்துவதற்காக இச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையிடம் ஒப்டைக்கப்பட்டுள்ளார். அண்மையில் மற்றுமோர் இலங்கைச் சிறைக்கைதி ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படுவார். மாலைதீவிலிருந்து 10 இலங்கைத் தவறாளர்களை வருங்காலத்தில் இலங்கையிடம் ஒப்படைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

- **சர்தேச நடுத்தீர்ப்பு நிலையம்**

சட்டத் துறையின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் சட்டச் சேவைகளில் உள்ள தொழில் தரக் கட்டளைகளைக் கவனத்திற் கொண்டு சமுதாய சேவைகளுடன் தொடர்புடைய வலய மையமொன்றாக நாடு அபிவிருத்தி அடைவது 2010 வரவுசெலவுத்திட்ட உரையின்போது இனங்காணப்பட்டது. அதன்படி இப்பிரேரணையை கருத்தில் கொண்டு சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையமொன்றை கொழும்பில் தாபிப்பதற்கு நீதி அமைச்சு தீர்மானித்தது.

சர்வதேச நடுத்தீர்ப்பு என்பது சர்வதேச வர்த்தக உடன்படிக்கை மற்றும் ஏனைய சர்வதேச தொடர்புகளினூடாக எழுகின்ற மோதல்களை தீர்ப்பதற்கான முதன்மையானதொரு முறைமை என்பதுடன் சர்வதேச வழக்கு நடவடிக்கைகளில் நீண்டகாலமாக அதன் மகத்துவத்தை செயற்படுத்தியுள்ளது. இம் முயற்சியில் நீதி அமைச்சின் பங்கு அந் நிலையத்தை தாபிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே ஆகும். இச்செயற்பாட்டிற்காக அரசாங்கம் 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. உலக வர்த்தக நிலையத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு நடுத்தீர்ப்பு நிலையம் நிறுவப்படுகிறது. இது தொடர்பான நிருவாக மற்றும் ஏனைய விடயங்களைக் கவனிப்பதற்கு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந் நிலையம் சர்வதேச நடுத்தீர்ப்புக்கான ஒரு இடமாகவும் செயற்படும் அதேவேளை உள்ளூர் நடுத்தீர்ப்பு, மாநாடுகள் மற்றும் பயிற்சிகள் போன்றனவற்றை நடாத்தும் வசதிகளையும் கொண்டிருக்கும்.

- **வெளிநாடுகளிலுள்ள எதிராளிகளுக்குக் கையளிப்பதற்கு இலங்கையின் நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற அழைப்பாணைகள் பற்றிய விபரம்**

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களினபோது பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய சட்டத்திற்கமைவாக, 2013 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு 388 அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நாடுகள் | வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை | நாடுகள் | வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 25 | ஒஸ்ரியா | 02 |
| கனடா | 11 | சீனா | 01 |
| சைப்ரஸ் | 06 | குரோசியா | 02 |
| எஸ்தோனியா | 01 | பிரான்ஸ் | 14 |
| ஜேர்மனி | 08 | இந்தியா | 19 |
| இத்தாலி | 78 | யப்பான் | 12 |
| யோர்தான் | 10 | கொரியா | 05 |
| குவைத் | 13 | லெபனான் | 04 |
| மலேசியா | 08 | நியூசிலாந்து | 04 |
| ஓமான் | 04 | பாகிஸ்தான் | 01 |
| கட்டார் | 13 | சவூதி அரேபியா | 09 |
| சிஷெல்ஸ் | 02 | சுவிற்ஸர்லாந்து | 08 |
| தன்சானியா | 01 | ஐக்கிய அரபு எமிரேட்டு | 48 |
| ஐக்கிய இராச்சியம் | 56 | ஐக்கிய அமெரிக்கா | 19 |
| உக்ரேய்ன் | 01 | வெனிசுலா | 03 |

- **குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்ர சட்ட உதவி தொடர்பான உடன்படிக்கை**

இலங்கைக்கும் பெலாரஸிற்குமிடையிலான குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்ர சட்ட உதவி சம்பந்தமான உடன்படிக்கை இரு தரப்பினருக்கும் விசாரணைகள், வழக்குகள், விளக்கங்கள் மற்றும் அதன் விளைவான நடவடிக்கைகள் உட்பட குற்றவியல் நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் பரஸ்ர சட்ட உதவியை வழங்குகிறது. இலங்கையின் நீதி அமைச்சுக்கும் பெலாரஸ் குடியரசின் நீதி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம் இரு தரப்பினருக்கிடையே அவர்களின் சட்ட முறைகள், நிறுவனங்கள் மற்றும் சட்டவாக்கம் என்பவற்றை விருத்தி செய்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் இரு தரப்பினருக்கும் நன்மை ஏற்படும் வகையிலும் அந்தந்த நாடுகளின் சட்டங்கள் மற்றும் அந்தந்த அரசுகள் ஏற்று அல்லது கையெழுத்திட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்களுக்கமைய ஒரு சட்ட கட்டமைப்பை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

ரஷ்யன் குடியரசுடன் குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்ர சட்ட உதவி மற்றும் கைதிகளைப் பரிமாறல் தொடர்பான ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை "வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முயற்சி" என்னும் அமைப்புடனும் பரஸ்ர சட்ட உதவி சம்பந்தமான பேச்சுவார்த்தையில் பங்குபற்றியது.

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி.) சமமாக சட்டத்தை அணுகல் கருத்திட்டம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கேடுகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்பதற்குப் போதிய மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமையால் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை முடித்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உதவும்பொருட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தின் உதவியுடன் நீதி அமைச்சு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை தொடங்கியது. அப்பொது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வாசித்து விளங்கக்கூடிய நீதிபதி ஒருவர் மாத்திரம் இருந்தார். எனவே அத்தகைய 30 வழக்கேடுகளை மொழிபெயர்ப்பதற்காக 2013 ஓகஸ்ட் மாதம் மேன்னமுறையீட்டு நீதிமன்றத்தில் தனியான மொழிபெயர்ப்பாளர் அலகொன்று முன்னோடி கருத்திட்டமாக நீதி அமைச்சினால் அமைக்கப்பட்டது. அம் முன்னோடி கருத்திட்டத்தின் கால அளவு 2013 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்தது. இக் கருத்திட்டத்தின் இறுதியில் எல்லா 30 வழக்கேடுகளும் மொழிபெயர்க்கப்பட்டு வழக்குக் கேட்பதற்காக 2014ம் ஆண்டின் முற்பகுதியில் மேன்னமுறையீட்டு நீதிமன்றத்தினால் பட்டியலிடப்பட்டன. இக் கருத்திட்டம் நீதி அமைச்சின் கீழ் ஒரு பிரதான கருத்திட்டமாக 2014ம் ஆண்டில் தொடர்ந்தும் நடை பெறுகிறது.

## ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டது சிறுவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள்

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குளைத் துரிதப்படுத்தி முடிவுறுத்தல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகத்திற்குப் பலியானவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதுமாகும். இந்த திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களாவன சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சு என்பன வாகும்.

இந்த புதிய முயற்சி சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குளைத் துரிதப்படுத்தி போலீஸில் புகார் செய்த தேதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் முடித்துக்கொள்வதை நோக்கமாக்க் கொண்டுள்ளது. இத் திட்டம் சிறுவர்கள் குற்றவியல் நீதி முறைமையில் பங்கேற்கும்போது அவர்கள் மீண்டும் பாதிக்கப்படாமல் தடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

பல பயிற்சி திட்டங்கள் அநுராதபுரம், கண்டி, அம்பாந்தோட்டை மற்றும் தங்காலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. 394 அலுவலர்கள் (பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு அலுவலர்கள், பொலிஸ் குற்றப்பிரிவு பொறுப்பு அலுவலர்கள், பெண்கள் சிறுவர் பணியகத்தின் பொறுப்பு அலுவலர்கள் மற்றும் நீதிவான் நீதிமன்ற வழக்குத் தொடுக்கும் அலுவலர்கள் ஆகியோர்) கலந்து கொண்டார். முன்னோடி கருத்திட்டம் மேற்கொள்ளும் பகுதிகளில் எழும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான தேங்கிக்கிடக்கும் வழக்குகளைத் துரிதப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறுவர் (நீதித்துறை பாதுகாப்பு) சட்டமூலத்தின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு அக்கறையுள்ள தரப்பினருடன் கலந்தாலோசித்து பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

## நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம்

www.justiceministry.gov.lk நீதி அமைச்சின் உத்தயோகபூர்வ இணையத் தளமாகும்.

## 5.2 நிருவாக மற்றும் தாபன பிரிவு

நிருவாக மற்றும் தாபன பிரிவின் முதன்மையான குறிக்கோள் நீதி அமைச்சினதும் அதன் கீழ்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பயிற்சி மற்றும் திறமையான மனிதவளங்ளை வழங்குவதற்கு உதவி புரிவதாகும். பணியாட்தொகுதியினரை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்தல், அலுவலர்களைத் தெரிவுசெய்து ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்சியளித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு வழங்கல், மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை என்பன இதில் உள்ளடங்குகின்றன. இதன்பிரகாரம் நீதி அமைச்சின் நிருவாக மற்றும் தாபன பிரிவு நீதி அமைச்சுக்கு நேரடியாக இணைக்கப்பட்டுள்ள 215 அலுவலர்களினதும் நாடுபூராவுமுள்ள நீதிமன்றங்களில் பணிபுரியும் 3,697 அலுவலர்களினதும் நிருவாகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ளது.

அத்துடன் கடன் மற்றும் முற்பண அங்கீகாரம், அரச ஊழியர்களின் பிணைப்பொறுப்பு, நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை, என்பனவும் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் திடீர் மரணவிசாரணை அதிகாரிகள், சமாதான நீதிவான்கள், சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள், சத்தியப்பிரமாண ஆணையாளர்கள், சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரை நியமிக்கும் பணிகள் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதியில் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளின் விபரம் கீழேதரப்பட்டுள்ளது.

- **பதவிகளை உருவாக்கல்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நிதி பிரமாண ஒழுங்குவிதி 71 க்கு அமைய புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன.

| திணைக்களங்கள்/ நிறுவனங்கள் | பதவி நிலை அலுவலர்கள் | இணைந்த சேவை | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நீதி அமைச்சு | | 42 | | 42 |
| நீதிமன்றங்கள் | | 618 | | 618 |
| அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | | 06 | | 06 |
| சட்ட ஆணைக்குழு திணைக்களம் | | 04 | | 04 |
| கடன் இணக்க சபை திணைக்களம் | | 02 | | 02 |
| தொழில் நியாயசபை அலுவலகம் | | 15 | 01 | 16 |
| நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 01 | 03 | 03 | 07 |
| இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 06 | 09 | 06 | 21 |
| **மொத்தம்** | **07** | **699** | **10** | **716** |

- **ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரித்தலும் அனுமதிக்காக சமர்ப்பித்தலும்**

சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் பன்னிரண்டு (12) ஆட்சேர்ப்பு திட்டங்கள் அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 8 ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- **ஆட்சேர்ப்பும் நியமனங்களும்**

**ஆட்சேர்ப்பு**

| நிறுவனம் | பதவி | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நீதி அமைச்சு | உதவிச் செயலாளர் (சட்டம்) | 01 |
| | இலங்கை தொழில்நுட்ப சேவை அலுவலர்கள் தரம் III (பயிற்சி தரம்) | 14 |
| | சாரதிகள் | 04 |
| | அபிவிருத்தி அலுவலர்கள் | 11 |
| | வரவேற்பாளர் | 02 |
| | சுற்று வங்களா காப்பாளர் | 01 |
| | புகைப்படக்கருவி உதவியாளர் (தற்காலிகம்) | 01 |
| | பட்டதாரி பயிற்சியாளர்கள் | 04 |
| நீதி அமைச்சு (நீதிமன்றங்களுக்கு) | அபிவிருத்தி அலுவலர்கள் | 247 |
| | பட்டதாரி பயிற்சியாளர்கள் | 50 |
| | நீதிமன்ற காப்பாளர்கள் | 110 |
| தொழில்நியாய சபை அலுவலகம் | சுருக்கெழுத்தாளர்கள் | 29 |
| | சாரதிகள் | 02 |
| அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | பட்டதாரி பயிற்சியாளர்கள் | 02 |
| கடன் இணக்க சபை திணைக்களம் | பட்டதாரி பயிற்சியாளர்கள் | 01 |
| மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | பட்டதாரி பயிற்சியாளர்கள் | 12 |

**நியமனங்கள்**

கௌரவ நீதி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அவரினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் நியமனங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | நியமனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சத்தியப்பிரமாண ஆணையாளர் | 661 |
| திடீர் மரணவிசாரணை அதிகாரி | 11 |
| சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள் | 85 |
| சமாதான நீதிவான்கள், | 4,143 |
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் | 189 |

**சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை சிபாரிசுசெய்தல்**

| நடைபெற்ற பரீட்சைகளின் விவரங்கள் | | பரீட்சார்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச்செய்வதற்கான பரீட்சை (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள்) | 03 | 647 |
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச்செய்வதற்கான பரீட்சை (அரபு மொழி) | 01 | 16 |

- **பயிற்சி**

**உள்ளூர்**

| பயிற்சியின் தன்மை | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| விடய ஆய்வு | 33 |
| கணினி | 04 |
| நூலக டிப்ளோமா | 01 |
| மொழிகள்: ஆங்கில மொழி<br>தமிழ் மொழி | 06<br>80 |
| மனித உரிமைகள் டிப்ளோமா | 25 |
| திட்ட முகாமைத்துவம் | 50 |
| மாநாடுகள் | 02 |
| பயிற்சி (மன்றாணை சேர்ப்பிப்போர் மற்றும் ஆணைநிறைவேற்றுவோர்) | 36 |

**வெளிநாடு**

| பயிற்சியின் தன்மை | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பயிற்சி (நீதிபதிகள் உட்பட) | 63 |
| மாநாடுகள் | 18 |

- **கடன் அங்கீகாரம்**

| கடன் வகை | தரப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஆதனம்/ வீடமைப்புக் கடன் | 57 | 82,062,088.20 |
| இடர் கடன் | 129 | 9,600,942.00 |
| பண்டிகை முற்பணம் | 161 | 815,000.00 |
| விசேட முற்பணம் | 34 | 85,000.00 |
| துவிச்சக்கர வண்டிக் கடன் | 05 | 30,000.00 |

- **ஏலவிற்பனை**

| ஏலவிற்பனைகளின் எண்ணிக்கை | செயல்முறை தொகை (ரூபா) |
|---|---|
| 150 | 42,320,162.00 |

- **நீதிபதிகளுக்கான "சுவசம்பத" காப்புறுதித் திட்டம்**

| சேர்த்துக்கொள்ளப்பட்ட நீதிபதிகள் | வழங்கப்பட்டதொகை (ரூபா) |
|---|---|
| 240 | 5,670,119.90 |

- **அலுவலக வாகனங்களுக்கான காப்புறுதி**

| திணைக்களம் | அலுவலக வாகனங்களின் எண்ணிக்கை | காப்புறுதி வகை | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| அமைச்சரின் அலுவலர்கள் | 10 | (பூரண காப்புறுதி) | 1,079,361.07 |
| நீதித்துறை அலுவலர்களின் அலுவலக வாகனம் | 158 | (பூரண காப்புறுதி) | 8,436,208.95 |
| | 02 | (மூன்றாம் நபர் காப்புறுதி) | 2,316.56 |
| அமைச்சின் அலுவலக வாகனம் | 20 | பூரண காப்புறுதி) | 722,372.81 |
| | 08 | மூன்றாம் நபர் காப்புறுதி) | 11,235.25 |

- **பிற செயற்பாடுகள்**

- 2013ம் ஆண்டு “தயட கிருள” தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு இணையாக கேகாலை, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள அலுவலர்களுக்கு உற்பத்தி திறன் கோட்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 10 நிகழ்ச்சிகங்களை நடாத்தப்பட்டது.

- 2013ம் ஆண்டு “தயட கிருள” தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிக்கு இணையாக பொலன்னறுவை, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களுக்குகிடையில் நடாத்தப்பட்ட உற்பத்தி திறன் விருது போட்டியில் சிறந்த நீதிமன்றத்திற்கு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

- 2013/ 2014 “தயட கிருள” தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு இணையாக அம்பாறை, கல்முனை, பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், கேகாலை, சிலாபம், புத்தளம் ஆகிய நீதிமன்ற நியாயாதிக்க வலயங்களில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்ட ஆக்கத்திறன்கோட்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகங்கள் போதாதுள்ளதால் மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களிளுள்ள அலுவலர்களுக்கு நீதித்துறை அல்லாத அலுவலர்களுக்கான பயிற்சி நிறுவளத்தில் மேலதிக விழிப்புணர்வு நிகழ்ச்சிகங்கள் நடாத்தப்பட்டன.

- 93 நீதிமன்றங்களுக்கு இணைய வசதிகளை வழங்கப்பட்டது.

## 5.3 உட்கட்டமைப்புப் பிரிவு

நீதி அமைச்சின் உட்கட்டமைப்புப் பிரிவானது நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல், பேணல், மற்றும் காணி கொள்ளல் போன்ற நீதிமன்ற முறைமைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அமைச்சில் முக்கிய பணியொன்றை ஆற்றுகின்றது.

**பின்வரும் பாரியளவிலான கருத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன**



1. நீர்கொழும்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதி 2013 இல் பொதுமக்களுக்குக் கையளிக்கப்பட்டது



2. மல்லாகம் புதிய நீதிமன்றக் கட்டிடமும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலமும் (ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டது



3. சாவகச்சேரி புதிய நீதிமன்றக் கட்டிடமும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலமும் (ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டது)






4. ஊர்காவற்றுறை புதிய நீதிமன்றக் கட்டிடமும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலமும் (ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டது)
5. கொட்டபொல புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி
6. குளியாபிட்டிய புதிய மேல் நீதிமன்ற கட்டிடம்
7. தம்புத்தேகம புதிய மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்
8. மன்னம்பிட்டிய புதிய சுற்று நீதிவான் நீதிமன்றம்
9. பக்கமூன புதிய சுற்று நீதிவான் நீதிமன்றம்
10. பொத்துவில் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்
11. ஒட்டமாவடி காதி நீதிமன்றம்
12. இறக்காம்ம் காதி நீதிமன்றம்
13. ஹொரன நீதிமன்றக் கட்டிடத்தொகுதி மின்தூக்கி
14. அநுராதபுர நீதிவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
15. அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றக் கட்டிடம்
16. கொறம்பாவ காதி நீதிமன்றம்
17. நீதி அமைச்சின் பண்டக சாலைக் கட்டிடமும் வாகனத்தரிப்பிடமும்
18. மாத்தளை காதி நீதிமன்றம்
19. பொத்துவில் காதி நீதிமன்றம்

**2013 இல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்கள்**

1. கல்பிட்டி சுற்று நீதிவான் நீதிமன்றம்
2. கெக்கிராவை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
3. சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம்
4. நொச்சியாகம சுற்று நீதிவான் நீதிமன்ற மண்டபம்
5. உடுகம மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
6. நுவரெலியா மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்த வேலை
7. வெள்ளைமணல் காதி நீதிமன்றம்
8. பெரியமடு- மாந்தை காதி நீதிமன்றம்
9. குருநாகல் காதி நீதிமன்றம்
10. பிபில நீதிவான் நீதிமன்றம்
11. பொல்காவல நீதிவான் நீதிமன்ற அலுவலகம்
12. மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதி
13. நாஉல நீதிவான் நீதிமன்ற சாட்சிப்பொருளறையும் ஆவணக்காப்பறையும்
14. மீயுயர் நீதிமன்றக் கட்டிட திருத்த வேலை

**பின்வரும் பெரியளவிலான கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன**



1. முன்மொழியப்பட்டுள்ள ஹோமாகம நீதிமன்ற கட்டிடத் தொகுதி



2. முன்மொழியப்பட்டுள்ள காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி



3. வத்தளை புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி

**பின்வரும் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்படவுள்ளன**

1. மூதூர் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றக் கட்டிடம்
2. எல்பிட்டிய நீதிவான் நீதிமன்ற அலுவலக அறையும் ஆவணக்காப்பறையும்
3. ஹிங்குராங்கொடை மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற சாட்சிப்பொருளறையும் ஆவணக்காப்பறையும்
4. கொழும்பு 12 தலைமை நீதிவான் நீதிமன்ற விளக்கமறியல் கூடும் மற்றும் பொலிஸ் காவலரன்
5. புத்தளம் மேல் நீதிமன்ற அலுவலக விடுதி
6. கந்தளாய் நீதிவான் நீதிமன்ற திருத்த வேலை
7. தெஹியத்த கண்டிய நீதிவான் நீதிமன்ற திருத்த வேலை
8. வரக்காபொல நீதிபதியின் விடுதி திருத்த வேலை
9. தங்காலை மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் விடுதித் திருத்த வேலை
10. நிக்கவரட்டியா சாட்சிப்பொருளறையும் ஆவணக்காப்பறையும்
11. கேகாலை மேலதிக மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்த வேலை
12. மாத்தறை மாவட்ட நீதிபதியின் விடுதி திருத்த வேலை
13. பொலனறுவை மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி திருத்த வேலை
14. விவில மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி திருத்த வேலை

## 5.4 கணக்குகள் பிரிவு

அமைச்சின் கணக்கீட்டு முறையை திறமையானதாகவும் பயனுள்ளதாகவும் மேம்படுத்துவதற்காக **2013** ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டவாறு அமைச்சு நிருவாகம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் ஆகிய செலவின தலைப்புகளின் கீழ் வரும் கணக்குகளை சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக நீதி அமைச்சிற்கு பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கௌரவ அமைச்சரின் அலுவலகம்
2. நீதி அமைச்சு நிருவாகம்
3. நீதி மன்றங்களின் நிருவாகம்
4. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
5. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**நிதிரீதியான முன்னேற்றம் (2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை)**

**அமைச்சு நிருவாகம் 110-1, 2 & 3**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 508,104,690 | 497,822,659 | 98 % |
| மூலதன செலவினம் | 301,195,310 | 293,050,685 | 97 % |
| **மொத்தம்** | **809,300,000** | **790,873,344** | **98 %** |

**நீதிமன்ற நிருவாகம் 228- 1 , 2**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 3,775,168,625 | 3,761,324,328 | 99% |
| மூலதன செலவினம் | 1,020,740,000 | 910,573,419 | 89% |
| **மொத்தம்** | **4,795,908,625** | **4,671,897,747** | **97%** |

## 5.5 திட்டமிடற் பிரிவு

திட்டமிடல் பிரிவு அமைச்சிலும் அதன் கீழ் வரும் திணைக்களங்களிலும் உள்ள கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பான பணிகளுடன் பின்வரும் பணிகளையும் ஆற்றுகிறது: -

- அமைச்சுக்காக வருடாந்த மூலதன வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயார் செய்தல்
- வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை தயார் செய்தல்.
- காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
- நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்தல்.
- முன்னேற்ற அறிக்கையை தயார் செய்தல் (எதிர்வரும் ஆண்டின் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).
- வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்டுதல்
- வழக்குகள் பற்றிய வருடாந்த அறிக்கையை தயார் செய்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த கணக்கு அறிக்கைகளை பாரளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீதி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்ட ரீதியான மற்றும் பிரதேச ரீதியான அபிவிருத்தி கருமங்களை மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் கூட்டிணைத்தல்.
- “தயட கிருள” தேசிய அபிவிருத்தி கண்காட்சி சம்பந்தமான வெலைகள்
- பாராளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டத்தினை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கெள்ளல்
- பாராளுமன்ற வினா சம்பந்தமான ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கெள்ளல்

## 5.6 நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந் நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் தாபிக்கப்பட்டது. அதன்படி, இந்த பயிற்சி நிறுவனம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக நீதித்துறையல்லாத அலுவலர்களுக்கு பல நிகழ்ச்சிகளை நடாத்தியது.

1. மனப்பாங்குகளையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல்
2. கடமைகளை விளங்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வு
3. நவீனமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு
4. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்

**2013 ஜனவரி 01 இல் இருந்து 2013 டிசம்பர் 31 வரை பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.**

| தொடர் இலக்கம் | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை | நீதித்துறை வலயங்கள் |
|---|---|---|---|---|
| 01 | மன்றாணை சேர்ப்பிப்போர் மற்றும் ஆணை நிறைவேற்றுவோர் | 12 | 181 | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருணாகல், தங்காலை, புத்தளம். |
| 02 | நீதிமன்ற எழுதுநர்கள் | 03 | 143 | கொழும்பு, களுத்துறை கம்பஹா, குருணாகல், சிலாபம், புத்தளம் கேகாலை |
| 03 | 2013ம் ஆண்டு “தயட கிருள” தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு இணையாக உற்பத்தி திறன் கோட்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 04 | 107 | குருணாகல், புத்தளம் கேகாலை, அம்பாறை, பொலனறுவை, குருநாகல் |
| 04 | தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகள் | 02 | 53 | நீதி அமைச்சின் அலுவலர்கள் |

## 5.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், மற்றும் 03 நியதிச்சட்ட நிறுவனங்களான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிருவாக சபை, நீதிபதிகள் நிறுவனம், சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் அமைச்சு நிருவாகச் செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் தொழில் நியாய சபை அலுவலகம் மற்றும் நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உள்ள மேல் நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியனவற்றின் கணக்காய்வினை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவு மேற்கொள்கின்றது.

இப் பிரிவு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரினது தலைமையில் ஒரு கணக்காளரினதும் 06 நிதி உதவியாளர்களினதும் 05 முகாமைத்துவ உதவியாளர்களினதும், 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும், உதவியுடன் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இவ்வலுவலர்கள் மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் முறைமை கணக்காய்விற்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் 2013 சனவரி முதல் டிசம்பர் வரை 15 மேல் நீதிமன்றங்கள், 16 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 09 மாவட்ட நீதிமன்றங்கள், 15 நீதவான் நீதிமன்றங்கள், 10 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள், 01 விசேட விமர்சன பரிசோதனைகள் உள்ளடங்கலாக 70 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 06. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

## 6.1 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

நாடு முழுவதற்குமான ஒரேயொரு சட்ட ஆய்வுகூடத்தையும் பிரதான உணவு ஆய்வுகூடத்தையும் கொண்டுள்ளது. இது சேவை வழங்கும் ஒரு திணைக்களமாவதுடன் நீதிமன்றங்கள், பொலிஸ், சுங்கம், வடிசாலை, உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதார, துறைமுகம், பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் ஆற்றுப்படுத்தப்படுகின்ற சான்றுப்பொருட்களை விஞ்ஞான பரிசோதனைக்கு உட்படுத்தி அவைபற்றிய அறிக்கைகளை இத் திணைக்களம் வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதிரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்களுக்காக பரிசோதனை செய்யப்படுவதுடன் இலங்கை சுங்கத்தால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற மாதிரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்கள் மற்றும் சுங்கவரி வகைப்படுத்தலுக்காக பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேக ஆவணங்களை பரிசோதனை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பன இத் திணைக்களத்தின் மூலம் செய்யப்படுகின்றன.

பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படும் எல்லா சான்றுப்பொருட்களும் குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டம், பெற்றோலியம், சான்றுகள், சுங்கம், வடிசாலை மற்றும் தொழிற்சாலை கட்டளைச்சட்டங்கள், விசம், அபின், மற்றும் அபாயகர ஔடத சட்டம், பீடை கொல்லிகள் சட்டம், சுற்றாடல் பாதுகாப்பு சட்டம், சுடுகலன் கட்டளைச்சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், கொழும்பு துறைமுக (நிருவாக) சட்டம், நறுமண சாதன சட்டம், உத்திகள் மற்றும் ஔடத சட்டம், உணவு சட்டம், பசளை சட்டம் போன்ற பல்வேறு கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பரிசோதனைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுகின்ற நிறுவனங்களில் விஞ்ஞான மதியுரைநர்களாகவும் இத் திணைக்களம் செயலாற்றுகிறது. நிபுணர்களின் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விஞ்ஞான அலுவலர்கள் குற்றங்கள் இடம்பெற்ற இடங்களைப் பரிசோதனை செய்வதற்கு முன்வருகின்றனர். வழங்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக அழைப்பு கிடைக்கும்போது சாட்சியங்களை அளிப்பதற்காக இவ்வலுவலர்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற ஆணைக்குழுக்களின் முன்னிலையில் சமூகமளிக்கின்றனர்.





இத் திணைக்களம் 2013 மே மாதம் முதல் பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடமொன்றிற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அத்தியாவசியமாகத் தேவைப்படும் டீ.என்.ஏ. ஆய்வுகூடமென்று தேவையான எல்லா உபகரணங்களுடனும் இவ் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் நீதிமன்ற சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு

வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திணைக்களம் குருநாகலில் மாகாண ஆய்வுகூடமொன்றை நிறுவியுள்ளது.

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| பகுதி | 2012.12.31 இல் உள்ள வழக்குகள் | பெறப்பட்ட வழக்குகள் | அறிக்கையிடப்பட்ட வழக்குகள் | 2013.12.31 இல் அறிக்கையிடப் படாது உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| போதை வஸ்துக்களும் பிற மருந்துகளும் | 1,448 | 6,182 | 6,955 | 675 |
| சுடுபடைக்கலன்களும் யுத்த தளபாடங்களும் | 1,437 | 374 | 995 | 816 |
| வெடிபொருளும் தீப்பிடித்தலும் | 805 | 292 | 567 | 530 |
| நச்சுப்பொருட்கள் | 3,065 | 1,620 | 2,288 | 2,397 |
| இரத்தம் மற்றும் பிற சரீர திரவங்கள் | 1,775 | 495 | 869 | 1,401 |
| ஆட்சேனைக்குரிய பத்திரங்கள் | 561 | 710 | 701 | 570 |
| பல்வேறு சட்ட மருத்துவப் பொருட்கள் | 388 | 328 | 485 | 231 |
| தலைமை அலுவலக நீதிமன்ற மாதிரிகள் | 63 | 2,335 | 2,281 | 117 |
| பல்வேறு குடிவகை மற்றும் புகையிலை | 119 | 1,309 | 1,316 | 112 |
| குடிவகை- குருநாகல் | 4,353 | 3,342 | 7,132 | 563 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 837 | 4,165 | 4,473 | 529 |
| பல்வேறு- உணவு வகைகள் | 22 | 577 | 561 | 38 |
| **மொத்தம்** | **14,873** | **21,729** | **28,623** | **7,979** |

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

- தேங்கிக்கிடக்கும் வழக்குகளை ஒரு வருடத்திற்குள் குறைப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- தற்போது இத்திணைக்களத்திற்குத் தேவையான விஞ்ஞானிகளின் எண்ணிக்கை 79 அக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 95% மான வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன. மிகுதி வெற்றிடங்களையும் வெகுவிரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நீதிமன்ற சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு செய்வதற்க்கான புதிய தொரு முறையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மல்டி மீடியா குற்றப்புலனாய்வு நிலையத்தைத் தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2013.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 135,363,426 | 134,032,377 | 99% |
| மூலதன செலவினம் | 237,193,000 | 201,543,798 | 85% |
| **மொத்தம்** | **372,556,426** | **335,576,176** | **90%** |

## 6.2 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம்இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பைமேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்திசெய்து மறுசீரமைப்பதற்காக பொருளளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமாக சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக ஏதாவது பிரேரணைகளப் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

1. கற்பழிப்பு மற்றும் பாரதூரமான கருச்சிதைவுபோன்ற சந்தர்ப்பங்களில் கருத்தரித்தலை மருத்துவரீதியில் முடித்துக்கொள்ளச் செய்வதற்கான பிரேரணை (மருத்துவரீதியில் கருத்தரித்தலை முடித்துக்கொள்ளல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்)
2. அழிக்கமுடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்)

**2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்ற சட்ட முறையான மறுசீரமைப்பு**

1. காணி கொள்வனவு மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்களை பரிசீலித்தல்
2. வழக்குத் தீர்ப்புக்களின் பின்னர் காணி கைமாறுதல், நன்கொடையளித்தல், மற்றும் பராதீனம் செய்தல் சம்பந்தமாக கொள்கைகளை பரிசீலித்தல்
3 சட்ட தாமதம் சம்பந்தமான தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்தல்
4 வினைத்திறனுள்ள நீதி நிருவாகம் தொடர்பாக அரசியலமைப்பு மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகளை பரிசீலித்தல்

**2012.08.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 13,800,000 | 11,534,872 | 84% |
| மூலதன செலவினம் | 2,500,000 | 2,177,392 | 87% |
| **மொத்தம்** | **16,300,000** | **13,712,264** | **84%** |

## 6.3 கடன் இணக்க சபை திணைக்களம்

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

### குறிக்கோள்

அசைவற்ற ஆதனங்ககள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்னவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச்செய்துள்ளது.

கடன் இணக்க சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவரில் ஒருவர் சபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு எந்தவித கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. அத்துடன் இச்சபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை எதுவும் கிடையாது. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணமாக ஒரு சிறிய தொகை மாத்திரமே அறவிடப்படுகிறது. ஆகவே கடன் சுமையால் பாதிக்கப்பட்ட சராசரி நபரொருவருக்கு மிகப்பெரிய சேவையொன்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சட்டத்தரணிகள் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது கட்டாயமில்லாதிருப்பது பொதுமக்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இச்சபையின் நடைமுறை நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இச்சபையில் எட்டப்படும் உடன்படிக்கைகள் கட்சிக்காரர்களினது இணக்கத்துடன் ஏற்படுவதேயன்றி சபையின் பணிப்பின்மூலம் அமுல்படுத்தப்படுவதல்ல. ஆயினும் கடன் இணக்க சபைக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப கடனாளிக்கு நியாயமற்ற முறையிலான வட்டித் தொகையொன்றை செலுத்த வேண்டியிருப்பின் அத் தொகையை குறைப்பதற்கும் சபையினால் வழங்கப்படும் யோசனையை கட்சிக்கார்ர்கள் ஏற்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் இக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கடன்பட்டோருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்கவும் இச் சபைக்கு அதிகாரம் உள்ளது. மேலும் கடன் கொடுத்தோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட சபையின் கடைசி விசாரணைக்கு ஆஜராகத்தவறும் சந்தர்ப்பத்தில் நிபுணத்துவ விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு அதன்பின் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

**2013.01.01 தொடக்கம் 2013.08.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| விபரம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்கொண்டு-வரப்பட்ட விண்ணப்பங்கள் 2013.01.01 | 533 |
| புதிய விண்ணப்பங்கள் | 453 |
| மீளாய்வுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 31 |
| மொத்த விண்ணப்பங்கள் 2013.12.31 | 1,017 |
| தீர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் | 133 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 157 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 20 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 03 |
| மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 19 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டமொத்த விண்ணப்பங்கள் | 332 |
| 2013.12.31 இல் உள்ளவாறான மிகுதி விண்ணப்பங்கள் | 685 |

**2013.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 9,635,000.00 | 7,458,932 | 77% |
| மூலதன செலவினம் | 765,000.00 | 717,593 | 94% |
| **மொத்தம்** | **10,400,000.00** | **8,176,526** | **79%** |

## 6.4 இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

1978ம் ஆண்டின் 27ம் இலக்க சட்ட உதவி சட்டத்தினால் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இலங்கையில் தகுதியுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட உதவிகளை பெற்றுக்கொடுப்பது இதன் தலையாய நோக்கமாகும். குறைந்த வருமானத்தை பெறுகின்ற மக்களினது வழக்கு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக இலவச சட்டத்தரணி உதவிகளை பெற்று கொடுப்பதும் சட்ட ஆலோசனைகளை பெற்று கொடுப்பதும் சமுதாயத்திற்கு சட்டம்பற்றிய விழிப்புணர்வை அளிப்பதும் இதன் பணிகளாகும். பின்வரும் பிரிவுகளின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **சட்ட உதவி ஆணைக்குழுவின் நீதிமன்ற பிரதிநிதித்துவம் (வழக்காடல்)**

நேரடியாக தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கொழும்பு சட்ட உதவி நிலையம் உள்ளடங்கலாக 76 சட்ட உதவி நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இச் சட்ட உதவி நிலையங்களின் பிரதான பணி வழக்காடுவதாகும். தகுதியுடைய மக்களுக்கு (ரூபா. 15,000 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானம்பெறுவோர்) சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. பெண்கள் தமக்கு அல்லது தமது பிள்ளைகளுக்கு ஜீசனாம்சத்தைக்கோரும்போது அவர்களது வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது அவர்களுக்காக நூதுமன்றத்தில் ஆஜராவதன்மூலம் உதவிக வழங்கப்படுகின்றது.

**சட்ட உதவி ஆணைக்குழுவினால் கையாளப்பட்ட வழக்குகள்**

| விபரம் | வழக்குளின் எண்ணிக்கை |
|---|---|
| 2012 ம் ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்டவை | 27,351 |
| புதிதாக சேர்ந்த வழக்குகள் (சனவரி 2013 - டிசம்பர் 2013) | 9,135 |
| முடிவுற்ற வழக்குகள் (சனவரி 2013 - டிசம்பர் 2013) | 4,932 |
| அடுத்த மாதத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டவை | 31,554 |
| சட்ட உதவி ஆணைக்குழுவினால் (சேவை வழங்கப்பட்ட மொத்த சேவை நாடுனர்கள் (சனவரி 2013 - டிசம்பர் 2013) | 58,346 |

**ஊடக நிகழ்ச்சிகள்**

- **தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்**

பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் அழைப்பின் பெயரில் சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலர்கள் சட்டம் சம்பந்தமான பல்வேறு நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடாத்தினார்கள். சனவரி 2013 தொடக்கம் திசெம்பர் 2013 வரை அத்தகைய 26 நிகழ்ச்சிகள் பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் நடாத்தப்பட்டன.

- **புதினப் பத்திரிகைகளில் வினா விடை பகுதிகள்**

இச் சேவை மக்கள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சட்ட அறிவை மேம்படுத்துவதற்குமான இன்னொருவிதமான உதவியாகும். மேலும் சட்ட உதவிப் பக்கங்கள் சட்ட விடயங்கள் சம்பந்தமான ஆசிரியர் தலையங்கங்களையும் கொண்டுள்ளன.

| பெயர் | மொழி | சட்ட உதவிப் பக்கங்கள் பிரசுரிக்கப்படும் நாள் |
|---|---|---|
| டெய்லி நியூஸ் | ஆங்கிலம் | ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் |
| லங்காதீப | சிங்களம் | ஓன்றுவிட்ட செவ்வாய்க்கிழமைகளில் |
| ரிவிர | சிங்களம் | வாரந்தோறும் |
| டியனிய | சிங்களம் | வாரந்தோறும் |
| தினகரன் | தமிழ் | வாரந்தோறும் |

- **வெளியீடுகள்**

பொது மக்களுக்கும் பொலிஸ் அலுவலர்கள், கிராம அலுவலர்கள் போன்ற அரசாங்க அலுவலர்களுக்கும் சட்ட விடயங்கள் சம்பந்தமான புத்தகங்களை இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு 2013ம் ஆண்டிலும் தொடர்ந்து அச்சடித்து விநியோகித்து வருகிறது. இவ்வெளியீடுகள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலுள்ளன. (சிங்களப் புத்தகங்கள்- 35,000 மற்றும் தமிழ் மொழி மூல புத்தகங்கள்- 6,000)

- **விழிப்புணர்வு மற்றும் பரப்புரை நிகழ்ச்சித்திட்டங்கள்**

2013 இல் சட்ட உதவி ஆணைக்குழு 377 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் கிளினிக்குகளையும் நடாத்தியுள்ளது. நாடுபூராவும் 20,334 பேர் (பொதுமக்கள், அரச அலுவலர்கள், மாணவர்கள், பெண்கள், மற்றும் சிறுவர்கள்) இந் நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள்.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுடன் இணைந்து சமமாக சட்டத்தை அணுகுதல் என்னும் கருத்திட்டத்தின் கட்டமைப்பின் கீழ் 25 இன் நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது. விசேடமாக இன் நிகழ்ச்சித்திட்டம் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தில் (யூலை 15 - யூலை 21) நாட்டிலுள்ள நலிவுற்ற பிரிவினருக்கு சட்ட விழிப்புணர்வு மற்றும் சட்ட உதவிகளை வழங்கியது.

**விசேட கருத்திட்டம்**

- **துணைச் சட்ட நிகழ்ச்சித்திட்டம்**

சட்ட உதவி ஆணைக்குழு விரிவான ஒரு துணைச் சட்ட சான்றிதழ் கற்கை நெறியொன்றை ஆரம்பித்தது. இக் கற்கைநெறி சட்டம் சம்பந்தமான சூழலில் பணிபுரியம் சட்ட உதவி ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக 2011 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் அவர்கள் தமது பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றலைமேம்படுத்துவதாகும். இந் நிகழ்ச்சித்திட்டம் நீதிமன்ற அலுவலர்கள், மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கள உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக அரச அலுவலர்களுக்கும் தனியார் துறை ஆளணியினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2013 இல் சட்ட உதவி ஆணைக்குழு ஐந்தாவது மற்றும் ஆறாவது துணைச் சட்ட நிகழ்ச்சிகளை நடாத்தியது.

- **புலம்பெயர்ந்த தொழிலாளர் உரிமை பிரிவு**

2013 இல் இப்பிரிவு பிரச்சினைகளை எதிர்கொன்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. ஆலோசனைகளைத் தொடர்ந்து அந்நபர்கள் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூளர் பிரிவுக்கோ அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கோ அனுப்பப்பட்டனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன: சம்பளம் கொடுக்கப்படாமை, பாலியல் தொல்லை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாடுகளில் மரணமடைதல், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படல்.

.

- **பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் பிரிவு**

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு சட்ட உதவி ஆணைக்குழுவினதும் அமைச்சினதும் நோக்கங்களை அடைவதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படுகிறது. தற்போது நடை பெறும் தாபரிப்பு வழக்குகளின்

எண்ணிக்கைகளின்படி இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு பெண்கள் மற்றும் சிறுவர்களில் முக்கிய கவனம் செலுத்துவது புலப்படுகிறது.

- **மறியற்காரர் உரிமைகள் பிரிவு**

தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர்களின் உறவினர்கள் சட்ட உதவி தேவைப்படின் ஏதாவதொரு சட்ட உதவி நிலையத்தை நாடி உதவியைப்பெறலாம். பெரும்பாலும் மறியற்சாலை திணைக்களத்தின் அலுவலர்கள் வழக்குகளை சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அனுப்புகிறார்கள்.

- **விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிமைகள் பிரிவு**

இப்பிரிவின் பிரதான நோக்கம் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதாகும். இதற்கான நடைமுறை பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டைத் தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதற்காக குடியியல் வழக்கொன்றை சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் பதிவுசெய்வதாகும். பணம் மீளப்பெறுவது சம்பந்தமான எல்லா நீதிமன்ற நட்டஈட்டு வழக்குகளும் இரண்டு வருடத்திற்குள் காலவிதிப்பு செய்யப்படுவதால் தாமதம் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டஈட்டிற்கான குடியியல் வழக்குகள் நிலுவையிலுள்ள அதேவேளை காப்புறுதி குறைகேள் அதிகாரியின் அனுசரணையின் கீழ் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. நீண்ட நீதிமன்ற நடைமுறைக்குப் பதிலாக உடன்பாடு ஒன்றின் மூலம் தீர்வினை எட்டுவது இதன் நோக்கமாகும். தற்பொழுது அத்தகைய பல வழக்குகள் காப்புறுதி குறைகேள் அதிகாரியின்கீழ் கலந்துரையாடப்படுகின்றன.

- **மனித உரிமை பணியகம்**

இப் பிரிவின் பணியானது அரச அலுவலர்களினால் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாக அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்தலை வலியுறுத்துவதாகும். தற்சமயம் 13 அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளன. அவற்றுள் இரண்டு வழக்குகள் முடிவுற்றுள்ளன.

- **யூஎன் எய்ட்ஸ் (UNAIDS) உடனான கூட்டுறவு**

2013 ஆம் ஆண்டில் யூஎன் எய்ட்ஸ் உடன் இணைந்து சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலர் ஒருவருடன் ஏச்ஐவி- எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவி, விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கிளினிக் என்பன ஆரம்பிக்கப்பட்டன. வெளிப்படையாக இத் திட்டம் இந்த வகை எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடாத்தப்பட்ட முதல் நிகழ்வாகும்.

- **முதியோர் உரிமை பிரிவு**

முதியோர்கள் சமூகத்தில் அதிக கவனிப்புக்கு உள்ளாக வேண்டியதொரு மக்கள் கூட்டமாகும். சட்ட உதவி நிலையத்தினால் இவ்வாறான நபர்களை இலக்காகக் கொண்டு பல நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்படுகின்றன. முதியோர்கள் தொடர்பான முறைப்பாடுகள் சட்ட உதவி நிலையங்களின் ஊடாக தீர்ப்பதற்கு தவறும் சந்தர்ப்பங்களில் அவை முதியோர் பராமரிப்பு சபையிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

- **தேசத்திற்கு மகுடம் (தயட கிருள்ள)**

தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சியை முன்னிட்டு பின்வரும் நிகழ்ச்சிகள் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டன.

- 720 சட்ட உதவி கிளினிக்குகள்
- விழிப்புணர்வூட்டும் பதாதைகள், மற்றும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தியமையும் கண்காட்சிகளும்
- இலவசமாக சிறுநூல்களும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன
- சட்ட உதவி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சட்டப்புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன
- சட்டப்புத்தக விற்பனையின்போது சட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன

**2013.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 116,500,000 | 116,500,000 | 100% |
| மூலதன செலவினம் | 19,700,000 | 19,655,237 | 99% |
| மொத்தம் | 136,200,000 | 136,155,237 | 99.9% |

## 6.5 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

1988ம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டம் வழக்காடுவதற்கு மாற்றீடாகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கானதொரு மாற்று வழிமுறையை வழங்குகிறது. தமது வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் மக்கள் தமது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சட்ட நடவடிக்கைகளை நாடும் போக்கு தற்போது அதிகரித்து வருகிறது. இந் நடைமுறையில் வழக்காடுவோர் தேவையற்ற செலவுகளை செய்யவேண்டியுள்ளதுடன் நீண்ட காலதாமதத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் பாதிப்புற்ற தரப்பினர் மனவாட்டமடைகின்றனர்.

நாடுபூராகவுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் 326 மத்தியஸ்தர் குழாங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அண்ணளவாக 7,900 மத்தியஸ்தர்கள் மத்தியஸ்த சபைகளில் சேவையாற்றுகின்றனர். மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது அதிமேதகு சனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்படும் 5 அங்கத்தவர்ளைக் கொண்டுள்ளது. மத்தியஸ்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், நீக்குதல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற அதிகாரங்களை இம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது.


மத்தியஸ்த சபைகள் பொறிமுறை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டின் 04ம் இலக்க மத்தியஸ்த சபை (திருத்தம்) சட்டத்தின் மூலம் மத்தியஸ்த சபைகளுக்கு கட்டாயமாக ஆற்றுப்படுத்த வேண்டிய பிணக்குகளின் நிதிப் பெறுமதி 250,000/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பராயமடையாத சிறுவர்கள் புரியும் தவறுகளும் தீர்வுக்காக மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் சமுதாயம் மத்தியஸ்தத்தை தமது பிணக்குகளை தீர்த்துக்கொள்வதற்கான இலகுவான செலவுகுறைந்த ஒரு பொறிமுறையாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொருவருடமும் 100,000 இற்கும் அதிகமான பிணக்குகள் மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை**

| | பிணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகள் | 172,892 |
| தீர்க்கப்பட்ட பிணக்குகள் | 78,401 |
| சத வீதம் | 45% |

- டிசம்பர் 31ம் திகதி வரை 53 ஐந்துநாள் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டு 1,900 மத்தியஸ்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்
- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களினால் சமூக மத்தியஸ்தம், பாடசாலை மத்தியஸ்தம் மற்றும் ஏனைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்பட்டன. அவர்கள் 31 ஒருநாள் நிகழ்ச்சிகளையும், 5 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும், 39 ஐந்துநாள் நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளார்கள்.

**மத்தியஸ்த சபைகளினால் பெறப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை (மாகாணரீதியாக) 2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை**



**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாங்கள்**

| இல. | மாவட்டம் | மத்தியஸ்தர் குழாங்கள் |
|---|---|---|
| 01 | கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, மகரகம, திம்பிரிகஸ்யாய, ஹோமாகம், ரத்மலானை, கடுவல. |
| 02 | கம்பஹா | அத்தனகல, வத்தளை, ஜாஎல, கந்தானை, மீரிகம. |
| 03 | களுத்துறை | களுத்துறை, இங்கிரிய, பேருவளை, மத்துகம (வெற்றிடம்) |
| 04 | காலி | ஹபரடுவ, அக்மீமன (வெற்றிடம்), அம்பலாங்கொட, இமடுவ, வெலிவிட்ட டிவிதுர, பத்தேகம, நாகோட. |
| 05 | மாத்தறை | மாத்தறை, வெலிகம |
| 06 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை, கடுவான |
| 07 | குருநாகல் | வீரம்புகெதர, மஸ்பொத, வமுனகொடுவ, குருநாகல், மல்லவபிடிய, வாரியப்பொல, மஹவ, கொட்டவெகர, நக்காவத்தை |
| 08 | கண்டி | பூயாபிடிய, அக்குரன, உடுநுவர, உடுதும்பர, பன்வில, ஹரிஸ்பத்துவ, பாத்தஹேவாஹட்ட, |
| 09 | மாத்தளை | உக்குவெல, யடவத்த |
| 10 | நுவரெலியா | கொத்மலை |
| 11 | இரத்தினபுரி | இரத்தினபுரி, எலபத, பெல்மதுல |
| 12 | கேகாலை | ருவான்வெல்ல, அரநாயக்க, புலத்கோபிட்டிய, கேகாலை |
| 13 | பொலனறுவை | வெலிகந்த, எலஹெர, மெதிரிகிரிய, லங்காபுர |
| 14 | அநுராதபுரம் | கஹட்டகஸ்திகிலிய (வெற்றிடம்), ஹொரொவபொத்தானை (வெற்றிடம்), கெபிட்டிகொல்லாவ, மிகிந்தலை, கிழக்கு நுவரகம்பலாத்த, மத்திய நுவரகம்பலாத்த, ராஜாங்கனை, தம்புத்தேகம. |
| 15 | மொனறாகலை | வெல்லவாய, மொனறாகலை, செவனகல |
| 16 | பதுளை | பசறை |
| 17 | திருகோணமலை | மூதூர், திருகோணமலை (பட்டிணமும் சூழலும்), கிண்ணியா (வெற்றிடம்), பதவிசிறிபுர, கந்தளாய் |
| 18 | வவுணியா | வவுணியா வடக்கு, வவுனியா (வெற்றிடம்) |
| 19 | மட்டக்களப்பு | வவுனதீவு, மண்முனைப்பற்று, காத்தான்குடி,, வெல்லாவெளி, வாகரை, வாழைச்சேனை, ஓட்டமாவடி, கிரான், களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை. கொரளைப்பற்று, மத்திய வாழைச்சேனை |
| 20 | முல்லைத்தீவு | கரைகதுரை பற்று, துணுக்காய், மாந்தை மேற்கு. |
| 21 | அம்பாறை | அக்கரைப்பற்று (வெற்றிடம்), சம்மாந்துறை (வெற்றிடம்), அம்பாறை வெற்றிடம்), |
| 22 | கிளிநொச்சி | பூநகரி, கரச்சி (வெற்றிடம்), |

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள் குழாங்கள்**

| இல. | மாவட்டம் | மத்தியஸ்தர் குழாங்கள் |
|---|---|---|
| 1 | கொழும்பு | திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை. |
| 2 | கம்பஹா | மினுவாங்கொடை, வத்தளை, ஜாஎல, கந்தானை |
| 3 | களுத்துறை | களுத்துறை, மத்துகம (வெற்றிடம்) |
| 4 | காலி | எல்பிட்டிய (வெற்றிடம்), இமதுவ, கரந்தெனிய, ஹபரடுவ |
| 5 | மாத்தறை | தெவிநுவர, முலட்டியன |
| 6 | அம்பாந்தோட்டை | வீரகெற்றிய, பெலியத்த, திஸ்ஸமஹராம, அம்பலாந்தோட்ட |
| 7 | குருநாகல் | பண்டுவஸ்நுவர கிழக்கு, அலவ்வ, வமுனகொடுவ, மாஸ்பொத்த, அம்பன்பொல |
| 8 | புத்தளம் | மஹகும்புக்கடவல, ஆனைமடு, நவகத்தேகம |
| 9 | கண்டி | கம்பளை, கலகெதர, அக்குரன, பூயாபிடிய, உடுநுவர |
| 10 | மாத்தளை | உக்குவெல, தம்புல்ல. |
| 11 | நுவரெலியா | வலப்பனே |
| 12 | இரத்தினபுரி | நிவித்திகலை, கொடகாவெல, பெல்மதுல்ல, இரத்தினபுரி |
| 13 | கேகாலை | வரகாபொல (வெற்றிடம்), கலிகமுவ, அரநாயக்க. ருவான்வெல்ல |
| 14 | பொலனறுவை | மெதிரிகிரிய, திபுலகல, எலஹெர, வெலிகந்த, |
| 15 | அநுராதபுரம் | தலாவ, கல்நேவ |
| 16 | மொனறாகலை | வெல்லவாய, மொனறாகலை |
| 17 | பதுளை | ஏல்ல, அப்புத்தளை, ஹலிஎல, பதுளை, ஹல்துமுல்ல (வெற்றிடம்), வெலிமட, பதுளை, சோரணதோட்ட |
| 18 | திருகோணமலை | வெருகல், கிண்ணியா. |
| 19 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு, செங்கலடி, ஏறாவூர், வாகரை. |
| 20 | முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு |
| 21 | அம்பாறை | காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை |
| 22 | மன்னார் | முசலி, நானாட்டான், மன்னார், மடு. |
| 23 | கிளிநொச்சி | கண்டாவளை, பூநகரி, பளை (பச்சிலைப்பள்ளி). |

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 202,898,500 | 197,885,369 | 98% |
| மூலதன செலவினம் | 1,706,800 | 1,349,377 | 79% |
| **மொத்தம்** | **205,601,000** | **199,204,746** | **97%** |

# 07 நீதிமன்றங்கள்

இவ் அமைச்சின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளில் பின்வரும் நீதிமன்றங்கள் உள்ளடங்குகின்றன.

- *உயர் நீதிமன்றம்*
- *மேன்முறையீட்டு நீதிமன்றம்*
- *மேல் நீதிமன்றங்கள்*
- *மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்*
- *மாவட்ட நீதிமன்றங்கள்*
- *நீதிவான் நீதிமன்றங்கள்*
- *தொழில் நியாய சபைகள்*
- *காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்*

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், 37 மேல் நீதிமன்றங்கள், 20 மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், 70 மாவட்ட நீதிமன்றங்கள், 78 நீதிவான் நீதிமன்றங்கள், 40 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 23 சுற்று நீதிவான் நீதிமன்றங்கள், 37 தொழில் நியாய சபைகள் 65 காதி நீதிமன்றங்கள் மற்றும் ஒரு காதி மேன்முறையீட்டு சபை தொடர்பிலான கணக்குப் பொறுப்புக்கள் அமைச்சினால் கையாளப்படுகின்றன. செலவினங்கள் 23 மேல் நீதிமன்ற கணக்கீட்டு நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 11 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய நியாயாதிக்கம்
- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| வகை | 2012/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2013/12/31 இல் உள்ள பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2013/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2013/12/31 இல் முடித்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் | அனுமதியளிக்கப்பட்ட வழக்குகள் | 2013/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் | 1,045 | 405 | 1,450 | 633 | -- | 817 |
| விசேட அனுமதி விண்ணப்பங்கள் | 347 | 319 | 666 | 230 | 57 | 379 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | -- | 19 | 19 | 19 | -- | -- |
| மேன்முறையிட்டு வழக்குகள் | 600 | 249 | 849 | 224 | -- | 625 |
| மேல்நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 130 | 98 | 228 | 64 | 11 | 153 |
| ஆணை விண்ணப்பங்கள் | 02 | 02 | 04 | 03 | -- | 01 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 1,043 | 544 | 1,587 | 378 | 106 | 1,103 |
| மீளாய்வு வழக்குகள் | 03 | 01 | 04 | 04 | -- | -- |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | -- | 01 | 01 | -- | -- | 01 |
| ஏனைய | 02 | 06 | 08 | 02 | -- | 06 |
| TAB APPEL | 01 | - | 01 | -- | -- | 01 |
| SC Special | -- | 08 | **08** | 01 | -- | 07 |
| SC Accelaration | -- | 02 | **02** | -- | -- | -- |
| மொத்தம் | **3,173** | | **4,827** | **1,560** | **174** | **3,093** |

**2013.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 58,100,000 | 54,163,108 | 93% |
| மூலதன செலவினம் | 14,200,000 | 10,481,400 | 73% |
| **மொத்தம்** | **72,300,000** | **64,644,509** | **89%** |

## 7.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

**2013.01.01 முதல் 2013.12.31 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை**

| வழக்கு வகை | தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 368 |
| உயர்நீதிமன்ற மேன்முறையீடுகள் (குற்றவியல்) | 193 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 472 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 648 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 83 |
| மீளாய்வு (குடியியல்) மற்றும் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 31 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 25 |

**2013.08.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 45,100,000 | 42,807,249 | 95% |
| மூலதன செலவினம் | 700,000 | 427,433 | 62% |
| **மொத்தம்** | **45,800,000** | **43,234,682** | **94%** |

## 7.3 தொழில் நியாயசபை செயலாளர் அலுவலகம்

தொழில் நியாய சபைகளின் செயலாளர் அலுவலகம் இல. A/, **428/11** டென்சில் கொபேகடுவ மாவத்தை பத்தரமுல்லயில் உள்ள நீதி அமைச்சின் கட்டிடத்தில் அமைந்துள்ளது.

**1957**ம் ஆண்டின் **62**ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் **31** (ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்படும் பிணக்குகளை விசாரித்து கையுதிர்வு செய்தல் தொழில் நியாய சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அரச அல்லாத நிறுவனங்களில் ஊழியர்களை வெளியேற்றுதல், போன்ற சம்வங்களின்போது நீதியை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமென தொழில் நியாய சபையை வரையறை செய்யலாம் என்பதுடன் இது அத்தகைய திறத்தினருக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். தொழில் நியாய சபை செயலாளர் அலுவலகத்தின் கீழ் 37 தொழில் நியாயசபைகள் செயற்படுகின்றன. அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு - 06 | கண்டி - 01 | அவிஸாவளை - 01 | பலாபத்வெல - 01 |
| இரத்மலானை - 01 | நாவலப்பிட்டிய - 01 | கடுவெல - 01 | மகரகம - 01 |
| ஹற்றன் - 01 | தலவாக்கலை - 01 | வத்தளை - 01 | நுவரெலியா - 01 |
| கம்பஹ - 01 | பதுளை - 01 | நீர்கொழும்பு - 02 | பண்டாரவளை - 01 |
| பாணந்துறை - 01 | அம்பாறை - 01 | களுத்துறை - 01 | மட்டக்களப்பு - 01 |
| காலி - 01 | திருகோணமலை - 01 | மாத்தறை - 01 | சிலாபம் - 01 |
| கொட்டபொல - 01 | அனுராதபுரம் - 01 | இரத்தினபுரி - 01 | குளியாபிட்டிய - 01 |
| கேகாலை - 01 | பலாங்கொடை - 01 | குருநாகல் - 01 | |

பண்டாரவளை தொழில் நியாய சபையானது 2010./2011 ஆம் ஆண்டுகளில் தேசிய உற்பத்தியாக்க விருது வழங்கும் போட்டியில் நுண்ணிய அளவிலான பிரிவின்கீழ் ஆறாம் இடத்தையும் ஊவா மாகாணத்தில் முதலாவது இடத்தையும் கொண்ட பீ தரத்திலான வெற்றியை அடைந்துள்ளது.

தொழில் நியாய சபைகளைப் பேணுவதற்குத் தேவையான மனிதவளங்கள், கூட்டு வளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை வழங்குதலும் முகாமைசெய்தலும் தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகத்தின் பிரதான பணிகளாகும். அதன்பிரகாரம் தொழில் நியாய சபை தவிசாளர்கள் தவிர்ந்த ஏனைய எல்லா அலுவலர்களினதும் தாபன மற்றும் நிருவாக பணிகள் மற்றும் தொழில் நியாய சபை தவிசாளர்கள் உட்பட எல்லா அலுவலர்களினதும் வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உட்பட எல்லா நிதி முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டுப் பணிகளும் தொழில் நியாய சபைகள் தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| 2013.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2013.01.01தொடக்கம் 2013.12.31 வரை | | 2013.12.31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் | |
| 6,464 | 2,510 | 2,537 | 5,437 |

தொழில் நியாய சபை செயலகத்தின் அலுவலர்களுக்கும் நாடுபூராகவுமுள்ள தொழில் நியாய சபைகளின் அலுவலர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகளும் குறித்த கால எல்லைக்குள் நடாத்தப்பட்டுள்ளன.

அறிவையும் திறமையையும்மேம்படுத்தும் பொருட்டு பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் 5 தொழில் நியாய சபை தவிசாளர்கள்/ மேலதிக நீதிவான்கள் கொழும்பு பல்லைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பை மேற்கொள்கின்றனர். மேலும் இரண்டு தொழில் நியாய சபை தவிசாளர்கள்/ மேலதிக நீதிவான்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டுவார பயிற்சியில் கலந்துகெண்டனர்.

**2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

| **விபரம்** | **ஒதுக்கம் (ரூபா)** | **செலவு (ரூபா)** | **முன்னேற்றம்** |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | **216,012,912** | **213,619,428** | 99% |
| மூலதன செலவினம் | 13,040,000 | **12,416,191** | 95% |
| **மொத்தம்** | **229,052,912** | **226,035,619** | **99%** |

## 7.4 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்

இஸ்லாமிய மக்கள் தமது சம்பிரதாயத்தின்படி சட்ட அலுவல்களை மேற்கோள்ள ஏதுவாக காதி நீதிமன்றங்கள் 1951ம் ஆண்டு 13ம் இலக்க முஸ்லீம் திருமணப்பதிவு மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 12 (1)ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டன. காதி நிதிமன்றமொன்றின் தீர்ப்பினால் அதிருப்தியடைந்த பிரிவினர்கள் காதி மேன்முறையீட்டு சபைக்கு மேன்முறையீடொன்றை முன்வைக்க முடியும். இந் நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டுச் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் 2005.10.08 ஆம் திகதியின் வர்த்தமானப் பத்திரத்தின்மூலம் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சிடம் ஆற்றுப்படுத்தப்பட்டது. இதற்கு முன் இந்நடவடிக்கைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டன. தற்போது 65 காதி நீதிமன்றங்களும் ஒரு காதி மேன்முறையீட்டு சபையும் உள்ளன.

**நாடு பூராகவும் இயங்கும் காதி நீதிமன்றங்கள் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| அட்டாளைச்சேனை | கல்ப்பிட்டி | பொலன்னறுவை |
| அக்கறைப்பற்று | களுத்துறை | பொத்துவில் |
| அக்குரணை | கண்டி | புல்மோட்டை |
| அநுராதபுரம் | காத்தான்குடி (மண்முனைப்பற்று) | புத்தளம் & சிலாபம் |
| அவிஸாவளை | கேகாலை | இரத்தினபுரி |
| பதுளை | கிண்ணியா | அகதிகள் - (கல்பிட்டி/ புத்தளம்) |
| பலப்பிட்டிய & எல்பிட்டிய | குளியாபிட'டி | சாய்ந்தமருது |
| பேருவளை | குருநாகல் | சம்மாந்துறை |
| போரா சமூகம் | மாஹொ | தம்பலகாமம் & கந்தளாய் |
| பியகம | மன்னார் | தங்காலை |
| கொழும்பு கிழக்கு | மாத்தளை | திருகோணமலை |
| கொழும்பு வடக்கு | மாத்தறை | தும்பனை |
| கொழும்பு தெற்கு | மாவனல்லை | உடபலாத்த கம்பளை |
| கொழும்பு மேற்கு | மேமன் சமூகம் | உடதலாவின்ன |
| ஏறாவூர் | மொனராகலை | உடுநுவர |
| காலி | மூதூர் | வாழைச்சேனை |
| கம்பஹா (திகாரிய) | நாவலப்பிட்டி | வவுனியா |
| அம்பாந்தோட்டை | நீர்கொழும்பு | யட்டிநுவர |
| ஹாரிஸ்பத்துவ & பூஜாபிட்டிய | நிந்தவூர் | யாழ்ப்பாணம் |
| ஹற்றன் | நுவரெலியா | |
| ஹோரன | ஓட்டமாவடி | |
| இறக்காமம் | பஹத்த-ஹேவாஹெட்ட | |
| கல்முனை | பாணந்துறை | |

**காதிமேன்முறையீட்டு சபையின் முன்னேற்றம்  (2010-2013 ஆகஸ்ட் வரை)**

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2010 | 276 | 184 | 92 |
| 2011 | 160 | 48 | 112 |
| 2012 | 206 | 69 | 137 |
| 2013 | 219 | 65 | 154 |

**நாடுபூராவுமுள்ள காதி நீதிமன்றங்களின் முன்னேற்றம் (2010-2013 ஆகஸ்ட் வரை)**

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2010 | 11,239 | 6,249 | 4,990 |
| 2011 | 10,554 | 5,786 | 4,768 |
| 2012 | 13,226 | 8,651 | 4,575 |
| 2013 | 12,735 | 7,660 | 5,075 |

**பின்வரும் காதி நீதிமன்ற கட்டிடங்களின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| • ஓட்டமாவடி | • ஹொரம்பாவ | • பொத்துவில் |
| • இறக்காமம் | • மாத்தளை | |

**பின்வரும் காதி நீதிமன்ற கட்டிடங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**

| | | |
|---|---|---|
| • வெள்ளைமணல் | • பெரியமடு (மாந்தை) | • குருநாகல் |

**2013 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள காதி நீதிமன்றங்கள்**

| | | |
|---|---|---|
| • அட்டாளைச்சேனை | • சாய்ந்தமருது | • வாழைச்சேனை |
| • முசலி | | |

# 8 தொடர்புடைய நிறுவனங்கள்

## 8.2 இலங்கை சட்டக்கல்லூரி

1990ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டக்கல்வி பேரவை கட்டளை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டக்கல்வி பேரவையானது இலங்கை சட்டக்கல்லூரியின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவுள்ளது. இக் கல்லூரி நீதி அமைச்சரின் இணக்கத்துடன் பேரவையினால் ஆக்கப்படுகின்ற சட்டக்கல்விப் பேரவை விதிகளின்படி தொழிற்படுகிறது. மேன்மைதங்கிய பிரதம நீதியரசர் பேரவையின் தவிசாளராக இருப்பதுடன் பெயர் குறித்துரைக்கப்பட்ட/ நியமிக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் (பிரதம நீதியரசர், நீதி அமைச்சர், இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியோரின் பிரதிநிதிகள்) பதவிவழி உறுப்பினர்கள் 3 பேரையும் (சட்டமா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், சொலிஸிட்டர் ஜெனரல்) இச்சபை உள்ளடக்கியுள்ளது.

சட்டக்கல்லூரி $3^1/_2$ வருட கற்கை நெறியொன்றினை நடாத்துகிறது. இக் கற்கைநெறியின் இறுதியில் சட்டத்தரணியாக அனுமதித்துக்கொள்வதற்கான இறுதிப் பரீட்சை நடைபெறும். பின்னர் அப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளை சட்டத்தரணியாக ஆட்சேர்ப்பு செய்வதற்காக உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் நடைமுறை பயிற்சி கற்கை நெறியொன்றினை கற்பதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தில் ஆகக்குறைந்தது 8 வருடங்கள் உள்ள சிரேஸ்ட சட்டத்தரணியொருவரின்கீழ் 6 மாதகால பயிற்சியை பின்பற்ற வேண்டும்.

இந் நிறுவனம் சுய நிதியளிப்பு நிறுவனமாக இயங்குகிறது. சட்டத்தொழிலில் நல்ல தரமான அனுபவமுள்ள வளவாளர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.